# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2193/10 - 2020 සැප්තැම්බර් මස 16 වැනි බදාදා - 2020.09.16

*2193/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**

*(அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 02/ 2020)*

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழான பின்வரும் தீர்மானம் பாராளுமன்றத்தினால் 2020, செத்தெம்பர் 10 ஆந் திகதிய அதன் பொது அமர்வில் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
*நிதி அமைச்சு.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, செத்தெம்பர் 15.*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## தீர்மானம்

இத்தீர்மானம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) 10 ஆம் பிரிவின் கீழ் இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையில் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதங்களின் படி அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயம்) அட்டவணை "அ" இன் ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமை வீதங்கள் விதிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டியவிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதங்களின்படி இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்படவும் செலுத்தப்படவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

| இ. ப. த. இல. | இ. மு. குறியீடு | | விபரம் | தீர்வை வீதம் | | அளவுக் கூறு |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னுரிமை | பொது | |
| (1) | (2) | | (3) | (4) | (5) | (6) |
| | | | | | | |
| **27.10** | | | **பெற்றோலியம் எண்ணெய்களும், நிலக்கரித் தார் கலவை (பிற்றுமினஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட எண்ணெய்களும், சுத்திகரிக்கப்படாதவை தவிர்ந்தவை :வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது சேர்க்கப்படாத நிறையில் 70% அல்லது கூடுதலாக பெற்றோலிய எண்ணெய் அல்லது நிலக்கரித் தார் கலவை (பிற்றுமினஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட எண்ணெயைக் கொண்ட தயாரிப்புகள், இவ்வெண்ணெய்கள் இத்தயாரிப்புகளின் அடிப்படை உள்ளீடுகளாக இருக்கவேண்டும்** | | | |
| | 2710.19.70 | --- | மசகு எண்ணெய் (பேஸ் ஒயில்கள்) மசகுகள் தயாரிப்பதற்கான | | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 45.00 | கி. கி. |
| | 2710.19.80 | --- | மசகுகள் | | 30% அல்லது கி. கி. ரூபா 115.00 | கி. கி. |
| | | | | | | |
| **34.03** | | | **பெற்றோலியத்தார் (பிற்றுமினஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட எண்ணிக்கைகளின் அல்லது அடிப்படை உள்ளீடாக பெற்றோலிய எண்ணெய்களை நிறையின் 70% அல்லது கூடுதலாகக் கொண்ட தயாரிப்புகள் தவிர்த்து புடவைகளை, தோலை, மென்மயிர்த்தோல் அல்லது பிற பொருட்களை எண்ணெய் அல்லது கொழுப்புப் பரிகரிப்புச் செய்யப் பயன்படும் ஒரு வகைத் தயாரிப்புகளும் உராய்வு நீக்கித் தயாரிப்புகளும் (உராய்வு நீக்கியை அடிப்படையாகக் கொண்ட வெட்டும் எண்ணெய்கள் உட்பட, அரை புரியாணி விடுவிப்பு அல்லது தயாரிப்புகள், துரு எதிர்ப்பு அல்லது அரிப்பு எதிர்** | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் | | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | | | முன்னுரிமை (4) | பொது (5) | |
| | | - | பெற்றோலியம் எண்ணெய்கள் அல்லது பெற்றோலியத்தாரில் (பிற்றுமினஸ்) இருந்து பெறப்பட்டதான எண்ணெய் கொண்டவை : | | | |
| | | | | | | |
| | 3403.19 | -- | பிற | | | |
| | 3403.19.10 | --- | மோட்டார் வாகனங்களுக்கு பாவிக்கப் படும் உராய்வு நீக்கிகள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 50.00 | கி. கி. |
| | | | | | | |
| | 3403.99 | -- | பிற : | | | |
| | 3403.99.10 | --- | மோட்டார் வாகனங்களுக்குப் பாவிக்கப் படும் உராய்வு நீக்கிகள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | 30% அல்லது ஒரு கி. கி. ரூபா 50.00 | கி. கி. |

*10-352*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.